# සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
# Department of Samurdhi Development

කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
**Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division**


| මගේ අංකය<br>**எனது இல**<br>My No | DSD/HO/DG/பொது | ඔබේ අංකය<br>**உமது இல**<br>Your No | ........................ | දිනය<br>**திகதி**<br>Date | 2020.04.02 |
|---|---|---|---|---|---|

மாவட்டச் செயலாளர்/சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
பிரதேச செயலாளர்,
சமுர்த்தி பிரதி பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர்,
தலைமையக முகாமையாளர்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (கி.உ.பிரிவு)

**உருவாகியுள்ள இடர் நிலை காரணமாக சமூக நலனுதவி வேலைத்திட்டத்தின் கீழ் காத்திருப்பு பட்டியல்ப்படுத்தப்பட்டுள்ளவர்களின் பொருட்டு ரூபா 5000/= கொடுப்பனைச் செலுத்துதல்**

மேற்படி தலைப்பின் கீழ் பிரதமரின் செயலாளரால் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள PTF/03-2020 என்ற இலக்கமும் 2020.03.31ம் திகதியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் இதற்கு மேற்பட்டதாக ஜனாதிபதியின் செயலாளரால் முன்வைக்கப்பட்டுள்ள PS/CSA/சுற்றறிக்கை/19/2020 என்ற இலக்கமும் 2020.03.30ம் திகதியிடப்பட்டதுமான கடிதம் தொடர்பில்

02. மேற் சொன்ன சுற்றறிக்கைகள் மூலம் புதிய கொரோனா வைரஸ் (Covid - 19) காரணமாக பொருளாதார ரீதியான பின்னடைவுகளுக்கு உள்ளான மக்கள் தொகுதியினரின் வாழ்க்கை நிலையினை நல்ல நிலைக்குள்ளாக்கும் பொருட்டு ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற ரூபா 5000 கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரண உரித்துக்கள் கிடைக்கப் பெறாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருட்டு இக் கொடுப்பனவினை முறையான பிரகாரம் செலுத்தும் நடவடிக்கைகளை எமது திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளவதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

03. பயனாளிகளை இனங்காணுதல்

ஏற்கனவே பிரதேச செயலளார்களால் தயாரித்துள்ள சமுர்த்தி நிவாரண காத்திருப்பு பட்டியலைப் பரீட்சித்துப் பார்த்து மேற்படி சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய பொருத்தமான விண்ணப்பபடிவங்களை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.

இந்த அனர்த்த ரீதியான நிலை காரணமாக தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஒரு சில அத்தியாவசிய தேவைகளையுடையவர்களும் இருப்பின் அவர்கள் தொடர்பிலும் கவனத்தினைச் செலுத்தி கிராமிய குழுக்கள் ஊடாக அங்கீகரித்துக் கொண்டு மேற்படி காத்திருப்புப்பட்டியலில் உட்படுத்திக்கொள்ளமுடியும். ஏற்கனவே காத்திருப்புப் பட்டியலுக்குட்படுத்தப்பட்டுள்ள மற்றும் ஏதேனும் பாதிப்புக்களுக்குள்ளாகியுள்ளவர்களை தெரிவு செய்வதற்கான கிராமிய குழுக்களை வரவழைப்பதற்கு ஏற்பாட்டாளர் ஒருவராக செயற்படுவதற்கு பிரிவுப்பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>**பணிப்பாளர் தலைமையதிபதி**<br>Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන)<br>**பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)**<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>**பிரதான கணக்காளர்**<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>**அலுவலகம்**<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

அதிகாரம் வழங்குகின்றேன். அத்துடன் 2020.04.06ம் திகதிக்கு முன்னர் இக்குழுவினைக் கூட்டி சகல பயனாளிகளை யும் சிக்கல்களின்றி இனம்கண்டு, கிராமிய மட்டத்திலான குழுக்களின் அங்கீகாரத்துடன் மேற் சொன்ன பட்டியலை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு பயனாளிகளை இனம் காணும் போது மாகாண சபை, கமத்தொழில் காப்பீட்டுச்சபை, வலது குறைந்தோருக்கான தேசிய செயலகம், முதியோர் செயலகம் போன்ற எந்தவொரு நிறுவனம் ஒன்றிலிருந்தாவது நலனுதவிகள் பெறுபவர்களை கவனத்தில் கொள்ளலாகாது. இது தொடர்பாக பிரதமரின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள PTF/03-2020 என்ற இலக்கமும் 2020.03.31ம் திகதியிடப்பட்டதுமான சுற்றறிக்கையின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

04. பெயர் பட்டியலை அங்கீகரித்துக் கொள்வதும் நிதி ஒதுக்கீட்டினை விடுவித்துக் கொள்வதும்.

பிரதேச செயலாளர்களுக்கு கிடைத்த கிராமியக் குழு அங்கீகரித்த தெரிவு செய்யப்பட்ட பட்டியலை குறித்த பிரதேச செயலாளர் அங்கீகரித்ததன் பின்னர் அந்த அலுவலகத்தின் மின்னஞ்சல் (email) ஊடாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பின்னர் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் மேற் சொன்ன பட்டியலையும் உரிய நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையினையும் தலைமைக்காரியாலயத்திற்கு மின்னஞ்சல் மூலமாக divirelie@gmail.com இற்கு சமர்ப்பித்ததன் பின்னர் குறித்த நிதி ஒதுக்கீட்டினை விடிவிப்பதற்கு என்னால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறு அனுப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளின் பொருட்டான நிதியில் ஆலோசனைகளை துரிதமாக தங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் மேற்படி சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு உதவித் தொகையினை வழங்குதல் 2020.04.09 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் முடிப்பதற்கு உத்தேசிதுள்ளதனால் இந்த மொத்தச் செயற்பாடுகளுக்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் கடமைத்தேவையின் அடிப்படையில் பிரதேச செயலகம் மற்றும் வங்கிச்சங்களின் பணிகளை நடாத்திச் செல்லும் பொருட்டு ஒரு உத்தியோகத்தரை மாத்திரம் அலுவலகத்தில் வைத்திக்கொண்டு ஏனைய உத்தியோகத்தர்களையும், அதேபோன்று மாவட்டச் செயலகங்களது பணியாளர்களின் ஒரு பிரிவினரை இக்களத்துறைக் கடமைகளின் பொருட்டு ஈடுபடுத்திக் கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

05. தாங்கள் உட்பட பணியாளர்கள் இதன் பொருட்டு வழங்கும் ஒத்துழைப்பினை போற்றிமதிக்கிறேன்.

ஒப்பம்

ஆர்.பி.பீ. திலக்கசிரி,
பணிப்பாளர் தலைமையதிபதி

Translated by:- M.M.M.Jawhar (Translator)

பிரதிகள் –

1. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம். - த.கூ.க.பொருட்டு
2. பிரதமரின் செயலாளர், பிரதமர் காரியாலயம். - த.கூ.க.பொருட்டு
3. செயலாளர், நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு. - த.கூ.க.பொருட்டு
4. செயலாளர், மகளிர்,சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - த.கூ.க.பொருட்டு
5. செயலாளர், சமூக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
6. கணக்காளர் நாயகம், கணக்காளர் நாயகத் திணைக்களம், - த.கூ.க.பொருட்டு
7. பிரதான கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
8. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - த.கூ.க.பொருட்டு
9. சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கி சங்க தலைவர்கள் - த.கூ.க.பொருட்டு